உலகப் பொதுமறை

# வள்ளுவம்

தொகுதி-1




தொகுப்பாசிரியர்

**உடையார்கோயில் குணா**

பதிப்பாசிரியர்கள்

கலாநிதி **க.சுதாகர்**

பேராசிரியர், முனைவர் **கி.விசாக ரூபன்.**

கலாநிதி **கே.ரீ.கணேசலிங்கம்**

**சி.சூரியகுமார்**

**சி.நிரோசன்**

**உலகத் திருக்குறள் மாநாடு - 2020**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

உள்ளத்தனையது உயர்வு

தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு-19

# நூல் விவரம்


தலைப்பு : உலகப் பொதுமறை வள்ளுவம் (தொகுதி–1)
(உலகத் திருக்குறள் மாநாட்டு கருத்தரங்கம்)

தொகுப்பாசிரியர் : **உடையார்கோயில் குணா.**

துணை
பதிப்பாசிரியர்கள் : கலாநிதி **க.சுதாகர்**
பேராசிரியர், முனைவர் **கி.விசாக ரூபன்.**
கலாநிதி **கே.ரீ.கணேசலிங்கம்**
**சி.சூரியகுமார்**
**சி.நிரோசன்**

மொழி : தமிழ், ஆங்கிலம்

உரிமை–வெளியீடு : தமிழ்த்தாய் அறக்கட்டளை
மாரியம்மன் கோவில்,
தஞ்சாவூர்–613 501.
கைபேசி: 9443938797, 7530002454.

அளவு : டெம்மி

பக்கங்கள் : 12+350=362

விலை : ரூ.250/–

ISBN : **978-81-909877-5-2**

நூல் வடிவமைப்பு: பரிதி பதிப்பகம்,
சோலையார்பேட்டை.
வேலூர் மாவட்டம்.
கைபேசி: 8098908840, 7200693200

# பெற்றோர்- பிள்ளை உறவு நிலைகளினை மேம்படுத்துவதில் திருக்குறள் கருத்துக்களின் செல்வாக்கு- ஓர் உளவியல் பார்வை.

18

**திருமதி. மேனகா சிவகரன்,**
சிரேஸ்ட விரிவுரையாளர் (உளவியல்),
மெய்யியல்த் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
angaaara@hotmail.com

## ஆய்வுச் சுருக்கம்

ஒரு தனிமனிதனின் முழுமையான ஆளுமை விருத்தியில் பெற்றோர் பிள்ளை உறவு என்பது மிகவும் அத்தியாவசியமானது என்பது உளவியல் உண்மை. இன்றைய காலத்தில் அத்தகைய பெற்றோர் பிள்ளை உறவின்; முக்கியத்துவம் அறியப்படாமல் அவை உதாசீனப்படுத்தப்படுகின்றன. இதனால் பெற்றோர்களும் பிள்ளைகளும் உளரீதியாகக் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். இந்நிலையினை சரியான முறையில் கையாண்டு கொள்வதற்குபெற்றோர் பிள்ளை உறவின் நடத்தைக் கோலங்களினையும் அவற்றினை மேம்படுத்த உதவும் நுட்பங்களினையும் உலகப் பொது மறை நூலாம் திருக்குறளில் முன்மொழியப்பட்ட கருத்துக்களினை ஆதராமாகக் கொண்டு தொகுத்துக் கூறுவதே இவ் ஆய்வின் நோக்கமாகக் காணப்படுகின்றது. இதற்காக திருக்குறளின் விளக்க உரை நூல்களில் இருந்து இரண்டாம் நிலையடிப்படையில் தரவுகள் பெறப்பட்டு அவை விபரண ரீதியாக பொருள்கோடல் செய்யப்பட்டுள்ளது. உண்மையில் திருவள்ளுவர் பெற்றோர் பிள்ளை உறவு தொடர்பான சிறந்த கருத்துக்களினைக் கூறியுள்ளார்.

பிரதான சொற்கள். பெற்றோர் பிள்ளை உறவு, திருக்குறள், உளவியல்

## 1. அறிமுகம்

மனிதனது ஆளுமை விருத்தியில் அடிப்படையாக உள்ளது பெற்றோர் பிள்ளை உறவேயாகும்;. தனி மனிதனின் முழுமையான உளவியல் முதிர்ச்சி என்பது குடும்பம் என்னும் சமூக அமைப்பிலே இருந்து ஆரம்பிக்கின்றது. ஒருவன் தன் குடும்ப உறவுகளில் இருந்து எவற்றினைப் பெற்றுக் கொள்கின்றானோ அதனையே கண்ணாடியாக அணிந்து இவ் உலகினை நோக்குகின்றான். குறிப்பாக உளவியலாளர் சிக்மன் ப்ரைட்டின் கருத்துப்படி ஒரு குழந்தை தாயிடம் கொண்டுள்ள ஆரம்ப கால உறவினை அடிப்படையாகக் கொண்டே நம்பிக்கை என்ற உணர்வினைப் பெற்றுக்கொள்ளுகின்றது. இவ் நம்பிக்கையே ஏனைய உறவுகளினை ஆரோக்கியமாகக் கொண்டு நடத்த அத்திவாரமாக உள்ளது. இது மட்டுமல்ல பிள்ளைகளிடம் உள்ள சமூக விரோத நடத்தை ஆரம்பகால குழந்தைப்பருவத்தில் பெற்றோர் அவர்களின் தேவைகளினை நிறைவேற்றத் தவறுகின்ற போது உருவாகுவதாக உளவியல் ஆய்வுகள் கூறுகின்றன. மேலும் குடும்பங்களில் பெற்றோர்களின் நடத்தைக் கோலங்கள் ஆரோக்கியமற்றதாக உள்ள போது அவையும் பிள்ளைகளின் உளத்தில் பாதிப்புக்களினை ஏற்படுத்துவதுடன் பெற்றோர்களளும் உளரீதியாகப் பாதிப்படைகின்றனர்.றுயடவழஸீ ஆழளள (2005) இதனை வைத்துப் பார்க்கின்ற போது ஒருவரின் உள ஆரோக்கியத்தில் குடும்ப உறவுகளின் பங்களிப்பு இன்றியமையாததாகும். இதனால்த் தான் உளக்குணமாக்கல் முறைகளில் குடும்பச் சிகிச்சை முறைகள் முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன. எனவே குடும்ப உறவுகளினை நாம் நெறிப்படுத்த முற்படுகின்ற போது ஒருவனின் உளஆரோக்கியத்தினை மேம்படுத்த அவை அடிப்படையாகி விடுகின்றது. அந்தவகையில் ஒருவனின் முழுமையான உளவிருத்திக்கு அடிப்படை அமைப்பான குடும்ப உறவுகளினை மேம்படுத்துவதற்கு உலகப் பொது மறை நூலான திருக்குறளும் பல்வேறு ஆரோக்கியமான கருத்துக்களினையும் வழங்குகின்றது. எனவே அக்கருத்துக்களினைத் தொகுத்துக் கூறுவதாகவே இவ் ஆய்வுக் கட்டுரையானது அமைய இருக்கின்றது.

## 2. ஆய்வின் நோக்கம்;

- குடும்ப உறவில் பெற்றோர் பிள்ளை உறவின் நடத்தைக் கோலங்களினை திருக்குறளினை அடிப்படையாகக் கொண்டு

இணங்காணல்

• குடும்ப உறவுகளினை மேம்படுத்த உதவும் நுட்பங்களினை திருக்குறளினை அடிப்படையாகக் கொண்டு இணங்காணல்

## 3. ஆய்வு முறையியல்

இவ் ஆய்வானது ஓர் விபரண ஆய்வாகவே அமைந்துள்ளது. இது பெரும்பாலும் இரண்டாம் நிலைத் தரவுகளினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 4. தரவுகளும் பகுப்பாய்வும்

4.1. திருக்குறளில் கூறப்பட்டுள்ள பெற்றோர் பிள்ளை உறவின் நடத்தைக் கோலங்கள்

கணவன் மனைவி உறவின் அன்புப் பிணைப்பு உறவு அவர்கள் ஈன்றெடுக்கும் மக்கள் செல்வங்களால் தான் முழுமையடைகின்றது. இந்த உறவு தான் தலைமுறைதோறும் தொடர்ந்து வரும் உறவாகும். இத்தகைய உறவின் முக்கியத்துவத்தினை வள்ளுவர்,

**பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த**
**மக்கட்பேறல்ல பிற (குறள் 61)**

**மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்**
**சொற்கேட்டல் இன்பம் செவிக்கு (குறள் 65)**

ஆகிய குறள்கள் ஊடாக விளக்குகின்றார்.

குழந்தைகளினைப் பெறுவது மட்டு;ம் பெற்றோரியல் அல்ல என்றும் அவர்களினை சிறந்த அறிவுடையோனாக்குதலே சிறந்த பெற்றோர்; பிள்ளை உறவென்பது, பிள்ளை தன் அறிவாலும் ஒழுக்கத்தினாலும் இவனை மகனாகப் பெற இவன் தந்தை என்ன தவம் செய்தானோ என்று பலரும் வியக்கும் வண்ணம் உயர்ந்து நிற்றல் வேண்டும் என்பது வள்ளுவரின் கருத்து. இக்கருத்துக்கள் அடிப்படையில் உளவியலாளர்கள் கூறும் நேரான பெற்றோரியலின் சிறந்த பண்புக்கூறுகளில் ஒன்றாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**தந்தை மகற்காற்று நன்றி அவையத்து**
**முந்தியிருப்பச் செயல் (குறள் 67).**

**மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை**
**என்னோற்றான் கொல்லெனும் சொல் (குறள் 70)**

மகனின் மேன்மையைக் கண்டு மகிழ்பவள் தாய் என்பதனை வள்ளுவர்,

**ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய் (குறள் 69).**

விளையாடிவிட்டுப் புழுதியுடன் வந்த ஒரு குழந்தை, தன் தந்தை சாப்பிட்டுக் கொண்டிருக்கும் சோற்றை அள்கிறதாம், தன் குழந்தையின் கை என்ற காரணத்தினால், இச் சோறு அசுத்தப்படுவதாகக் கருதாமல் அச்சோற்றினை அமிழ்தை விடச் சிறந்ததாகக் கருதுகின்றார் தந்தை. இதனை வள்ளுவர்,

**அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்**
**சிறுகை அளாவிய கூழ் (குறள் 64). ஏன்கிறார்.**

அதாவது சிறந்த நேரான பெற்றோரியல் பாணியினைக் கொண்டுள்ள பெற்றோரின் பொறுமையினை வள்ளுவர் அன்றே தன் குறளில் கூறியிருப்பது ஆச்சரியம். பிறரால் பழிக்கப்படாத நல்ல மக்களினைப் பெற்றால் ஏழு பிறப்பிலும் அவனுக்குத் துன்பங்கள் அணுகாது என பிள்ளைகளின் நற்குணங்களினால் பெற்றோருக்கு ஏற்படும் சிறப்பினை சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளார் வள்ளுவர் அவர்கள்.

**எழுபிறப்பும் தீயவை தீண்டா பழியிறங்காப்**
**பண்புடை மக்கள் பெறின் (குறள் 62)**

பிள்ளைகளிற்கும் பெற்றோருக்கும் உரிய உறவு எந்தளவுக்கு உளத்திற்கு இன்பம் கொடுக்கின்றது என்பதனை வள்ளுவர்;,

**மக்கள் மெய் தீண்டல் உடற் இன்பம் மற் அவர்**
**சொற்கேட்டல் இன்பம் செவிக்கு (குறள் 65)**

அதாவது பெற்றோர்கள் தம் பிள்ளைகளினது மெய்தீண்டுதல் உடலுக்கு இன்பம் தரும். அவர்களது சொல்லினைக் கேட்டால் செவிக்கு இன்பம் தரும். இக் குறளினூடு பெற்றோர் மனஅழுத்தத்தினை கையாளவதில் பிள்ளைகளின் பங்கினை சிறப்பாக எளிமையாகக் கூறுகின்றார்.

4.2. திருக்குறளில் கூறப்பட்டுள்ள பெற்றோர் பிள்ளை உறவுகளினை மேம்படுத்த உதவும் நுட்பங்கள்

**இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனியிருக்கக் காய்கவர்ந்தற்று (குறள் 100)**

மனிதர்கள் இனம், மொழி, மதவேறுபாடுகள் இன்றிக் கடுஞ் சொற்களினை நீக்கி, இன்சொற்களினைப் பேசி வாழ்ந்தால் வாழ்க்கை சிறக்கும். இழுக்காறு, அவா, வெகுளி போன்றவற்றினை விலக்கி, மற்றவர் கருத்துக்களிற்கு மதிப்பளித்து வாழ்வது அறிவுடமை ஆகும். கூறுபவர் யார் என்று பாராமல் கூற்றின் மெய்யமையினை ஆய்தலே அறிவு என்கிறார் வள்ளுவர். ஏனவே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளிடம் இனிய சொற்களைப் பேசி உறவாடுகின்ற போது அவ் உறவு ஆரோக்கியமாக இருக்கும்.
மனிதனின் வாழ்நாள் சிறிது. அதில் சாதிக்க வேண்டியவை எண்ணற்றவை. கூடிவாழும் மனிதர்களுடன் நல்லுறவு இருந்தால் தான் வாழ்க்கையில் நல்ல செயல்களினைச் சாதிக்க முடியும். பெற்றோர் பிள்ளை உறவு நல்ல வகையில் உள்ள பொழுது தான் எதிர்கால சந்ததி உளஆரோக்கியம் மிக்கதாகச் சிறக்கும். அத்தகைய நல்லுறவு கொள்ள நன் மொழி பேசத் தெரிந்திருக்க வேண்டும் என்றும் புறங்கூறக் கூடாது, பயனற்ற சொற்களினை பேசக் கூடாது என்று வள்ளுவர் இனிய மொழிகளினையே பேச வேண்டும் என்றும் நல்ல கனிந்க கனி கையிலிருக்கும் போது வெக்காய் போன்ற கொடுமையான சொற்களினை ஏன் பேச வேண்டும் எனப் பின்வருமாறு கேட்கின்றார்.

***இனிய உளவாக இன்னாத கூறல்***
***களியிருப்பக் காய்கவர்ந்தற்று ( குறள் 100)***

பிறருக்குத் தீமை செய்யாது இன் சொல்லினையே பேசவேண்டும் என்று கூறும் வள்ளுவர் மனமும் எந்தக் களங்கமும் இல்லாமல் தெளிந்த நீரோடை போல இருக்க வேண்டும். அவ்விதம் இருத்தலே அறம் என்றும் மனத்தூய்மையற்ற செயல்கள் யாவும் ஆரவாரச் செயல்கள் என்றும் கீழ்க்கண்ட குறளின் மூலம் விள்க்குகின்றார்.

***மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்***
***ஆகுல நீரல பிற ( குறள் 34)***

ஒருவன் மனத்தளவு குற்றமற்றவனாக இருக்க வேண்டும் என்பதனை இக் குறள் வலியுறுத்துகின்றது.

இனிய சொற்;களினைக் கூறல் என்பது குடும்ப உறவினை வலுப்படுத்தும் ஓர் ஆயுதமாகும். அதாவது மனம் மகிழ்ந்து ஒருவனுக்கு ஒன்றைக் கொடுப்பதனை விட முகம் மலழ்ர்ந்து இன்சொல் பேசுவது சிறந்ததாகும் என்பதனை,

**அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து**
**இன்சொலனாகப் பெறின் (குறள் 92)**

பிறர்சொல்லும் இனிய சொல் தனக்கு இனிமையாக இருத்தலை உணர்கின்றவன் பிறரிடம் ஏன் கடுஞ்சால் பேசுகின்றார் என வள்ளுவர் கேள்வி எழுப்பினார். இதனை,

**இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ**
**வன் சொல் வழங்குவது (குறள் 99)**

இல்லற ஒழுக்கத்தில் மாறுபடாமல் நின்று அடங்கியிருப்பவனின் பெருமை, மலையை விட மிகப் பெரியதாகும். இதனை வள்ளுவர்,

**நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையிலும் மாணப் பெரிது. (குறள் 124) ல்** கூறிள்ளார்.

மேலும் மனிதனுக்கு மனிதன் தீங்கு செய்வது மட்டுமல்ல, செய்த தீமையினை மன்னித்து விட வேண்டும் என்று கூறும் வள்ளுவர் ஒருவரைப் பற்றி அவர் இல்லாத போது புறம் கூடக் கூடாது என்று உறவினை மேம்படுத்தும் ஓர் அரிய நுட்பத்தினைக் கூறுகின்றார். இதனை பெற்றோர் பிள்ளை உறவில் கடைப்பிடிக்கும் போது அவ் உறவு சீர்மியம் பெறும். அறம் என்ற கொல்லினை வாயினால்க் கூட சொல்லாதவனாக இருந்தாலும் ஒருவரினைப் பற்றி அவர் இல்லாத போது பேசாமரல் இருத்தல் அதுவே சாலச்சிறந்தது என்பதனைக் கீழ்க் கண்ட குறள் மூலம் விளக்குகின்றார்.

**அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்**
**புறங்கூறான் என்றல் இனிது (குறள் 181)**

புறங்கூறக்கூடாது என்று போதித்த திருவள்ளுவர் பேசும் மொழிகளும் பயனுடையதாக இருக்க வேண்டும் என்றும் பயனற்ற சொல்களினைச் சொல்லக் கூடாது என்பதனை,

**சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க**

**சொல்லில் பயனிலாச் சொல் (குறள் 200)**
என்று அறிவுரை கூறுகின்றார்.
உலகமயமானதால் உலகம் சுருங்கிய தென்னதோ உண்மை. உலகம் சுருங்கியது போல மனித மனங்களும் இன்றைய காலத்தினில் சுருங்கிவிட்டது. இதுவும் உறவாடலில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது என்பது மறுத்துவிட முடியாத உண்மை. அண்டை அயலாளருடன் எவ்வித உறவுகளுமின்றி; மாடமாளிகைகளாகக் கட்டப்பட்ட மனைகளில் மனிதன் தனித்து விடப்பட்டான். பேற்றோர பிள்ளை உறவுகள் கூட இன்று அருகில் இருந்தும் ஆதரவற்ற ஓர் நிவீயினை உணரச்செய்துள்ளன என்பதும் உண்மையே. மனிதனிடம் இயல்பாக இருக்கவேண்டிய மனிதநேயமே இல்லாமல் போனது மட்டுமின்றி செய்நன்றியும் குறைந்து வருகின்றமையிகைன் காணக் கூடியதாக உள்ளது. இதனால்த் தான் அன்று பிள்ளைகள் பெற்றோர்களினை கவனிக்காமல் முதியோர் இல்லங்களில் சேர்க்கும் நிலை அதிகர்த்துக் கொண்டே செல்கின்றது. உண்மையில் உரிய காலத்தில் செய்யப்பட்ட உதவி கடுகளவானாலும் மறந்து விடமால் நன்றியுணர்வுடன் இருக்க வேண்டும் என்பதனைக் கீழ்க்கண்ட குறளின் மூலமாக விளக்குகின்நார்.

**திணைத்துணை நன்றி செயினும் ஒருவன்**
**புறங்கூறான் என்றல் இனிது. (குறள் 104).**
ஒருவன் தனக்குத் தீங்கு செய்கின்ற போது திரும்பி அவனுக்கு பழிக்குப் பழி வாங்காமல், தீமை செய்தவன் நாணும் விதமாக நன்மை செய்திட வேண்டும் என்பதனை,
**இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயம் செய்து விடல் (குறள் 314)**
என்னும் குறளில் கூறியுள்ளார்.

துன்பம் வருகின்ற போது முட்டக் கொடுத்துத் தாங்கும் நல்ல பிள்ளைகள் இல்லாத வீடும், நாடும் துன்பமாகிய கோடரி அடிப்பகுதியை வெட்டச் சாயும் மரம் போல் விழுந்து விடும் என்று கூறிய வள்ளுவர் குடும்பம் மேலோங்க பிள்ளைகள் துன்பம் வரும் போது செயலாற்ற வேண்டும் என வலியுறுத்துகின்றார்.

**இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்**
**நல்லாள் இல்லாத குடி (குறள் 1030).**

தன் வீட்டினையும் நாட்டினையும் மேன்மையடையச் செய்பவர் ஒருநாளும் சோம்பியிருக்க மாட்டார்கள். ஆவர்கள் தம் பெருமையினை எண்ணியிருந்தால் எல்லாம் கெட்டுவிடும் என்பதனை வள்ளுவர்,

**குடிசெய்வார்க் கில்லை பருவம் மடிசெய்து**
**மானங் கருதக் கெடும் (குறள் 1028)**

முயற்சி, நிறைந்த அறிவு என்னும் இரண்டுடன் இடைவிடாது ஒருவன் செயற்படுவானாயின் அவன் குடும்பமும் நாடும் உயரும் என்பதனை வள்ளுவர்,

ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி (குறள் 1022). எனும் குறளினூடு விளக்குகின்றார்.

## 5. ஆய்வின் முடிவுகள்

மேலே கூறப்பட்ட தரவுகளினைத் தொகுத்துப் பார்க்கின்ற போது பெற்றோர பிள்ளை நடத்தைக்கோலங்களாவன,இந்த உறவு தான் தலைமுறைதோறும் தொடர்ந்து வரும் உறவாகும்,சிறந்த அறிவுடையோனாக்குதலே சிறந்த பெற்றோர்,பிள்ளை தன் அறிவாலும் ஒழுக்கத்தினாலும் இவனை மகனாகப் பெற இவன் தந்தை என்ன தவம் செய்தானோ என்று பலரும் வியக்கும் வண்ணம் உயர்ந்து நிற்றல்,மகனின் மேன்மையைக் கண்டு மகிழ்பவள் தாய் போன்றவற்றினைக் காணலாம்.

குடும்ப உறவினை மேம்படுத்தும் நுட்பங்களாக,இல்லற வாழ்வில் உயர்வு தாழ்விற்கு இடமில்லை. மன ஒற்றுமையே முதன்மை பெறுகின்றது. பிறருடன் இன்செகாற்களினப் பேசி மகிழ்வுடன் வாழவேண்டும்.,மனம் மகிழ்ந்து ஒருவனுக்கு ஒன்றைக் கொடுப்பதனை விட முகம் மலழ்ர்ந்து இன்சொல் பேசுவது சிறந்ததாகும்,இழுக்காறு, அவா, வெகுளி போன்றவற்றினை விலக்கி, மற்றவர் கருத்துக்களிற்கு மதிப்பளித்து வாழ்வது,புறங்கூறக் கூடாது, பயனற்ற சொற்களினை பேசக் கூடாது,பிறருக்குத் தீமை செய்யாது,மனமும் எந்தக் களங்கமும்

இல்லாமல் தெளிந்த நீரோடை போல இருக்க வேண்டும்,இல்லற ஒழுக்கத்தில் மாறுபடாமல் நின்று அடங்கியிருக்க வேண்டும்.,செய்த தீமையினை மன்னித்து விட வேண்டும், செய்நன்றியுடையவனாக இருக்க வேண்டும்.,பழிக்குப் பழி வாங்காமல், தீமை செய்தவன் நாணும் விதமாக நன்மை செய்திட வேண்டும.; முயற்சி, நிறைந்த அறிவு என்னும் இரண்டுடன் இடைவிடாது ஒருவன் செயற்பட வேண்டும். துன்பம் வருகின்ற போது முட்டுக் கொடுத்துத் தாங்கிட வேண்டும்.

இவற்றினை வைத்துப் பார்க்கின்ற போது பெற்றோர் பிள்ளை உறவுகளின் நடத்தைக் கோலங்களும் அவ் உறவாடல்த் திறன்களினை மேம்படுத்தும் நுட்பங்களும் உலகப் பொதுமறை நூலாம் திருக்குறளில் புதைந்திருப்பதனை நாம் மறுத்து விடமுடியாது. இக் கருத்துக்கள் மனிதனைச் செம்மைப்படுத்தி உளரீதியாக ஆரோக்கியமாக வைக்கும் என்பது திண்ணம்.

## உசாத்துணை நூல்கள்


- *இராம வேதநாயகம் (2017). திருவள்ளுவ மாலை மூலமும் எளிய உரை விளக்கமும், முதலாம் பதிப்பு., மணிமேகலை பிரசுரம், சென்னை.*
- N. V. Subbaraman (2015). *வள்ளுவம்வாழ்ந்தவள்ளலார்* [Valluvam Vaalndha Vallalar]. Chennai: Unique Media Integrators. ISBN 978-93-83051-95-3.
- https://thirukkural133.wordpress.com/2011/11/26/chapter-5-family-life/
- Walton moss, Effects of mental illness on family Quality on life, Pubmed, 672.